DECEMBER 2024 **U/ID 30619/ULA3A**

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

எவையேனும் பத்திற்கு 30 சொற்களில் விடையெழுதுக.

1. சிறுமை உறுபவோ? செய்பு அறியலரே! – இக்கூற்றினை விளக்குக.

2. பட்டினப்பாலையின் ஆசிரியர் யார்? பட்டினப்பாலையின் மொத்தப் பாடல் அடிகள் எத்தனை?

3. புகார் நாட்டுக் காவிரியின் சிறப்புகளைக் குறிப்பிடுக.

4. 'நெறிநின்றார் நீடுவாழ் வார்' – யார்? ஏன்?

5. 'பசும்புல் தலைகாண்பது அரிது' – எவ்வாறு?

6. 'அறம் இப்போதே செய்' – ஏன்? நாலடியார் வழி விளக்குக.

7. ஏமாங்கத நாட்டின் சிறப்புகளுள் ஒற்றினைக் குறிப்பிடுக.

8. எண்பேராயம் என்றால் என்ன?

9. உலக உயிர்களால் இன்ன தன்மையன் என்று எடுத்துக்கூறுவதற்கு அரியவன் யார்?

10. பம்புதல் என்ற சொல்லின் பொருளைக் குறிப்பிடுக.

11. ஒற்றளபெடை என்றால் என்ன? சான்று தருக.

12. தொடர்நிலை என்றால் என்ன?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்திற்கு முறையே 200 சொற்களில் விடையெழுதுக.

13. உடன்போகா நின்றாரை இடைச்சுரத்துக் கண்டார் சொல்லிய நற்றிணைப் பாடலின் கருத்துக்களை விளக்குக.

14. சோழன் உருவப் பல்தேர் இளஞ்சேட்சென்னியைப் பரணர் எங்ஙனம் பாடுகிறார்? விளக்குக.

15. செல்வம் வரும் – போகும் மற்றும் இளமை அறம் நாலடியாரின் பாடல் செய்திகளை விளக்குக.

16. இந்திர விழாவின் வரலாற்றினை எடுத்துரைக்க.

17. மானிடப் பிறவின் பயனாகச் சேக்கிழார் கூறுவனவற்றை எடுத்துரைக்க.

18. திருக்கூட்ட வாழ்த்து மற்றும் விநாயகர் வணக்கச் சிறப்பினைச் சேக்கிழார் வழி விளக்குக.

19. செய்யுள் வகைகளை விளக்கி எழுதுக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றிற்கு முறையே 500 சொற்களில் விடையெழுதுக.

20. நும்பாடப்பகுதியிலுள்ள முல்லைப்பாட்டில் இடம்பெறும் செய்திகளைத் தொகுத்தெழுதுக.

21. நீத்தார் பெருமை அதிகாரச் சிறப்புகளை விளக்குக.

22. சிலம்பில் இடம்பெறும் இயற்கைப் போற்றல் மற்றும் புகார் நகரச் சிறப்பினை எடுத்துரைக்க.

23. நும்பாடப்பகுதியில் இடம்பெறும் கம்பராமாயணப் பாடல்களின் கருத்துக்களை விளக்குக.

24. யாப்பிலக்கணம் குறித்து எழுதுக.

———————